ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1299/6 - 2003 ජූලි 29 වැනි අඟහරුවාදා - 2003.07.29
1299/6 ஆம் இலக்கம் - 2003 ஆம் ஆண்டு யுலை மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது).

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ.- 3/87 (ii)

**1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்**

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கை பிணையங்கள்,
பரிவர்த்தனை ஆணைக்குழு.

கொழும்பு,
2003, யுலை 25.

விதி

1995 யூன் 16 ஆம் தேதிய 875/ 9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1995 ஆம் ஆண்டின் கம்பனி பொறுப்பேற்புக்களும் ஒன்றிணைவுகளும் கோவை 31 ஆம் விதியில் அவ்விதியின் (1) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. இவை அதன் பந்தி (1அ) மற்றும் (1ஆ) என்றாற்போன்று பயனுறுதல் வேண்டும்.

"(1அ) (1) ஆளொருவர் எப்பங்குதாரர்களுக்கு கொடைமுனைவொன்று நீடிக்கப்படவேண்டுமோ அப் பங்குதாரர்கள் அனைவருக்கும் முனைவை நடைமுறைப்படுத்துவதற்குப் போதியளவு நிதி வளங்களைக் கொண்டிருந்தாலன்றி, அத்தகைய ஆள் இவ்விதியின் நியதிகளின்படி முனைவொன்றைச் செய்வதற்கான பொறுப்பொன்றை உறுதலாகாது.

(2) அத்தகைய ஆள் முனைவை முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாதவராயிருப்பின் அல்லது ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி அவ்வாறு தென்படுமாயின் ஆணைக்குழுவானது அத்தகைய ஆள் இவ்விதியின் கீழ் முனைவொன்றைச் செய்யும் பொறுப்பைத் தவிர்ப்பதனால் ஏற்படும் தொகையினதான பங்குகளுக்கான உரித்தை கைவிடுமாறு இவ்விதியின் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரைப் பணிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1ஆ) (1) இவ்விதியின் நியதிகளின்படி முனைவொன்றைச் செய்யும் பொறுப்பை உறுகின்ற ஆளெவரும் அத்தகைய முனைவை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அவ்வாளின் ஆற்றலைப் பற்றி ஆணைக்குழு திருப்தியுறும் வகையில் ஆதார ஆவணங்களுடன் சத்தியக் கடதாசியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட சத்தியக் கடதாசி அத்தகைய முனைவைச் செய்வதற்கான பொறுப்பு உறப்பட்ட அல்லது அத்தகைய முனைவைச் செய்யுமாறு ஆணைக்குழுவால் தேவைப்படுத்தப்பட்ட மூன்று சந்தை நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்".

8-640

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.